திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் மக்களின் குறைகளை தீர்த்து வைக்கும் 'உங்களுடன் ஸ்டாலின் முகாமை' முன்னாள் மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன் தொடங்கி வைத்து திட்ட முகாமில் துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் மனுதாரர்களுடன் பதிவு செய்யப்படுவதை பார்வையிட்டு கலந்துரையாடினார். உடன் இரா. அறிவழகன் சகிலா அறிவழகன். எம்.கேசவன், மு.பாஸ்கர், கரீம் அருள். அர்ஜீன் இஸ்மாயில் வெங்கடேன், பொன்சாந்தி காளிதாஸ், குப்பன். டி.கே.ராஜா குமரபூபதி ராஜாசேகர் சாண்டிலியன் தேவன் சிவா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் கடந்த 15 நாட்களாக தொடர்ந்து அனைத்து வட்டங்களிலும் கிட்டத்தட்ட 60க்கும் மேற்பட்ட இடங்களில் கழக அரசின் சாதனைகள் குறித்தும், "ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கும் நிகழ்வை குறித்தும் "மெட்ராஸ் என்பதை சென்னை என மாற்றிய கலைஞர்" என்ற தலைப்பில் சென்னையின் வளர்ச்சியில் கலைஞரின் பங்களிப்பை விளக்கும் வகையிலும் வாகன பரப்புரையில் ஈடுபட்டு சிறப்பாக செய்து முடித்த மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் விஜய் வெங்கடேசன், சுற்றுச்சூழல் அமைப்பாளர் என்.எஸ்.பாலசுப்பிரமணியம், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் சண்முகநாதன், மயிலை மேற்கு பகுதி கழகத்தின் அவைத் தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன், மயிலை மேற்கு பகுதி இலக்கிய அணி தலைவர் பி.எஸ்.ஆறுமுகம் மற்றும் வாகனத்தை பராமரித்த தினேஷ் ஆகியோர் சென்னை தென் மேற்கு மாவட்டம் சார்பில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பாராட்டு தெரிவித்தார்.

மீட்பர் பயிற்சி தொடக்கம்!

உலக பாம்பு தினம்! "நாகம்" செயலி!

வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹூ வெளியிட்டார்!

சென்னை, ஜூலை 18 - சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ, உலக பாம்பு தினத்தை முன்னிட்டு கிண்டி குழந்தைகள் இயற்கை பூங்காவில் தொடங்கி வைத்து, 'NAAGAM' செயலி வெளியிட்டு, மீட்பர் பயிற்சியைத் தொடங்கிவைத்தார்.

நேற்று முன்தினம் (16.07.2025) சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ, உலக பாம்பு தினத்தை முன்னிட்டு கிண்டி குழந்தைகள் இயற்கை பூங்காவில் தொடங்கி வைத்து, "நாகம்" செயலி வெளியிட்டு, மீட்பர் பயிற்சியை தொடங்கிவைத்தார்கள்.

"தமிழ்நாட்டில் பரவலாகக் காணப்படும் பாம்புகள்" என்ற தலைப்பிலான ஒரு சிறு புத்தகம், விழிப்புணர்வு சுவரொட்டி மற்றும் பாம்பு மீட்பு கருவிகள் மற்றும் 'NAAGAM' மொபைல் செயலியை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டு, வனத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ, பேசும் போது, தமிழ்நாட்டில் 142 வகையான பாம்புகள் வாழ்ந்துகொண்டு உள்ளன. ஆனால் இவை இன்றும் தவறாகவே புரிந்து கொள்ளப்படுகின்றன. உலகம் முழுவதும் பாம்புகள் வழிபடப்படும் உயிரினங்களாக இருந்தாலும், அவற்றை சுற்றியுள்ள பல்வேறு புதிர்கள், புராணங்கள், அச்சங்கள் இன்னும் நீங்கவில்லை. ஆனால் பாம்புகளின் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் மறுக்க முடியாதது, அவை எதிரிகள் மற்றும் இரை வனப்பகுதியின் சமநிலையை பேணுகின்றன. உண்மையில், பாம்புகள் வனத்தின் மௌனக் கட்டடக்கலைஞர்களாக செயல்படுகின்றன.

நகரங்களில் பாம்புகள் பெரும்பாலும் பயத்தில் பார்க்கப்படுகின்றன, ஏனெனில் விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது. ஆனால், கிராமப்புறங்களில் மக்கள் பாம்புகளுடன் இணக்கமாக வாழக் கற்றுக் கொண்டுள்ளனர். இந்தத் துறையில், இருளர் சமூகத்தினர் பாம்புகளை பாதுகாக்கும் பணியில் அற்புதமான அறிவும், செயல்பாடும் காட்டியுள்ளனர். குறிப்பாக, வடிவேல் கோபால் மற்றும் மாசி சதையன் ஆகிய இருளர் சமூகத்தினர், 2023ல் பத்மஸ்ரீ விருது பெற்றதின் மூலம் தேசிய அளவில் புகழ் பெற்றுள்ளனர்.

கிராமப்புற மக்கள் பாம்புகளின் பழக்கங்களை நன்கு அறிந்திருப்பதால், அவை எங்கு இருப்பவை என்றும், குறிப்பாக இனப்பெருக்க காலத்தில் அவற்றை எப்படி தொந்தரவு செய்யாமல் இருக்க வேண்டும் என்றும் அறிந்து இருக்கின்றனர். இத்தகைய இணக்கம் நகர்ப்புற மக்களிடத்திலும் வளர வேண்டும். மனிதர்களும் பாம்புகளும் இணக்கமாக வாழ்வது, இருவருக்கும் அவசியமானது.

பாம்பு பாதுகாப்பை இரண்டு முக்கிய வழிகளில் செய்யலாம்:

1. சரியான சட்டங்களை அமல்படுத்துவது

2. பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது.

பாம்பு கடி சம்பவங்களை அறிவிக்கும் கட்டாயமுடைய முறையை உருவாக்கி அடுத்த நிலைக்கு செல்ல வேண்டும். இது மூலம் எங்கு, எப்போது, எத்தனை பாம்பு கடிகள் நடந்துள்ளன என்பதற்கான தரவுகளைப் பெற முடியும். மேலும், 'NAAGAM' செயலி பொதுமக்களுக்கு பாம்பு காணப்பட்ட இடங்களைத் தெரிவிக்க உதவுகிறது. தகவல் கிடைத்தவுடன், பயிற்சி பெற்ற மீட்பு குழுக்கள் அந்த இடத்திற்குச் சென்று அறிவியல் முறையில் பாதுகாப்பாக பாம்புகளை பிடித்து அதற்கான வாழ்விடத்தில் விடுவிப்பார்கள். இறுதியாக, அதிகாரிகள் அறிவியலற்ற மற்றும் ஆபத்தான முறையில் பாம்பு பிடிப்பதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பாம்புகளை கையாளும் பணியில் பயிற்சி பெற்ற நிபுணர்களே, நெறிமுறை மற்றும் அறிவியல் முறைகளை பின்பற்றிக் செயல்பட வேண்டும். அறிவு, மரியாதை மற்றும் சமூக பங்காற்றலின் வழியாக, மனிதர்களுக்கும் பாம்புகளுக்கும் பாதுகாப்பான சூழலை நாம் உருவாக்கலாம்.

அதனைத் தொடர்ந்து, இந்த நிகழ்வின் முக்கிய சிறப்பம்சமாக, பொதுமக்கள் பாம்புகளைப் பார்த்தவுடன் புகாரளிக்கவும், சரியான நேரத்தில் மீட்பு நடவடிக்கைகளை எளிதாக்கவும் வடிவமைக்கப்பட்ட 'NAAGAM' மொபைல் செயலியின் பீட்டா பதிப்பு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

தமிழ்நாடு வனத்துறை, உலக பாம்பு தினத்தினை ஜூலை 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் இரண்டு நாள் நிகழ்வோடு 2025 ஆம் ஆண்டு உலக பாம்பு தினம் மற்றும் பாம்பு வாரத்தை கொண்டாடுகிறது.

பாம்பு மீட்பு, மனித பாம்பு மோதல் குறைப்பு, தமிழ்நாட்டில் மீட்பு மற்றும் மறுவாழ்வு முயற்சிகளின் தற்போதைய நிலை மற்றும் பாம்பு கையாளுதலில் நெறிமுறை நடைமுறைகள் உள்ளிட்ட முக்கிய தலைப்புகளில் மூத்த அலுவலர்கள் மற்றும் பாதுகாப்பு நிபுணர்கள் உரையாற்றினர்.

இரண்டு நாள் கொண்டாட்டம், தமிழ்நாட்டில் அறிவியல் பூர்வமாக பயிற்சி பெற்ற மற்றும் நெறிமுறை ரீதியாக பொறுப்பான பாம்பு மீட்புப் பணியாளர்களின் வலையமைப்பை உருவாக்குவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியாக இருக்கும், மேலும் இது மிகுந்த உற்சாகத்துடனும் பங்கேற்புடனும் வரவேற்கப்படுகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சியில் ராகேஷ் குமார் டோக்ரா, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர், எச். வேணுபிரசாத், கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் - (வன உயிரினம்), ரிட்டோ சிரியாக், இயக்குனர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, டாக்டர். பிரமிளா ராஜன், இயக்குனர், மெட்ராஸ் முதலை பண்ணை அறக்கட்டளை மற்றும் திருமதி. தமிழ் மொழி அமுது, இணை இயக்குநர், விளம்பரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நீலகிரி மாவட்டம்

குன்னூர் நகராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

அரசு தலைமைக் கொறடா கா. இராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்!

குன்னூர், ஜூலை 18 - நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பாலகினாவா ஜெயின் மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில்,

அரசுதலைமை கொறடா கா.ராமச்சந்திரன் - மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வாண்டையார் திருமண மண்டபத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, மனுதாரர்களுடன் கலந்துரையாடிய நிகழ்ச்சியினை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பாலகினாவா ஜெயின் மண்டபத்தில் நடைபெற்ற உங்களு டன் ஸ்டாலின்"; திட்ட முகாமில் அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண் டார்.

இந்நிகழ்வில், அரசு தலைமை கொறடா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவங்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அதன்படி அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தினை. முதலமைச்சர் அவர்கள். இன்றைய தினம், கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வாண்டையார் திருமன மண்டபத்தில் நொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு. மனுதாரர்களுடன் கலந்துரையாடினார். அதனை தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் நடைபெற்று வருகிறது. நமதுமாவட்டத்திலும் இன்றைய தினம் 6 இடங்களில் முகாம்கள் நடைபெற்று வருகிறது. இதில் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பாலகினாவா ஜெயின் மண்டபத்தில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் நானும், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பல்வேறு அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டு நடைபெற்று வரும் முகாமினை பார்வையிட்டோம். இம்முகாமில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களை அழைத்து செல்ல ஏதுவாக சக்கர நாற்காலி, காவல் துறை மூலம் (உதவி மையம்). பதிவு செய்யும் இடம் உள்ளிட்ட

அனைத்து வசதிகளும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் (16.07.2025) உலிக்கல் பேரூராட்சிக்குட்பட்ட 1 முதல் 18 வார்டுகளுக்கான முகாம் சுங்கம் சி.எஸ்.ஐ சமுநாய கூடத்திலும், குன்னூர் வட்டம் பர்வியார் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் கோடமலை சமுதாயக் கூடத்திலும், கோத்தகிரி வட்டம், தேனாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் சோலூர் மட்டம் ஊராட்சி அலுவலகத்திலும் நடைபெற்றது. மேலும், 'உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. நமது மாவட்டத்தில் 5 நகராட்சிகள், 10 பேரூராட்சிகள், 35 கிராம ஊராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் உள்ள பொதுமக்களும் பயன்பெறும் வகையில், நகர்ப்புற பகுதிகளில் 65 முகாம்களும், ஊரக பகுதியில் 81 முகாம்களும் என மொத்தம் 146 முகாம்கள் நடத்தப்படவுள்ளது. முதற்கட்டமாக 67 முகாம்களும், இரண்டாம் கட்டமாக 16.8.2025 முதல் 14.9.2025 வரை 42 முகாம்களும், மூன்றாம் கட்டமாக 15.9.2025 முதல் 14.10.2025 வரை 37

முகாம்களும் நடைபெற உள்ளது. இம்முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, எரிசக்தி துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை போன்ற துறைகள் 3 மூலமாகவும் பல்வேறு வகையான 45 சேவைகள் வழங்கப்படுகிறது. இன்று விண்ணப்பம் அளித்த பொதுமக்களின் கோரிக்கைகள் 45 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். முன்னதாக, அரசு தலைமை. கொறடா, மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், மற்றும் அரசு துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு அரங்குகள் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட அரங்கம் ஆகியவற்றினையிட்டார்.

பார்வை அதனை தொடர்ந்து, அரசு தலைமை கொறடா மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர், குன்னூர் ஊராட்சி ஒன்றியம் வண்டிசோலை ஊராட்சி சோலாடா மட்டம் என். என்.டி. சுட்டடத்திலும், ஜெகதனா பேரூராட்சிக்குட்பட்ட ஜெகதளா கிராம சமுதாய கூடத்திலும், அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட பிக்கோல் சமுதாய கூடத்திலும் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்" முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். முன்னதாக.

அரசு தலைமை கொறடா, குன்னூர் பேருந்து நிலையத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அதிநவீன வாகனத்தின் மின்னணு மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 'உங்களுடன் ஸ்டாலின்" திட்டம். தொடர்பாக ஒளிபரப்பப்பட்ட குறும்பாடலை, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகளுடன் நேரில் பார்வையிட்டார்.

இந்நிகழ்வின்போது, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், மகளிர் திட்ட இயக்குநர் மரு.ஜெயராமன், சமூக பாதுகாப்பு திட்டம் (தனித்துணை ஆட்சியர்) ராதாகிருஷ்ணன், குன்னூர் நகராட்சி ஆணையாளர் இளம்பரிதி, குன்னூர் நகர்மன்ற தலைவர் திருமதி சுசீலா, துணைத்தலைவர் வாசிம்ராஜா, உதவி இயக்குநர் தொழிலாளர் நலத்துறை லெனின், மாவட்ட வழங்கல் அலுவலர்சரவணன். திட்டக்குழு உறுப்பினர் ராமசாமி, குன்னூர் வட்டாட்சியர் ஜவகர், வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.விஜயா உட்பட பலர் உடனிருந்தனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை! மு.மகேஷ்குமார் - இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

கழக வழக்கறிஞர்கள் சைதை ஆ.தேவக்குமாரன் - இந்துமதி தேவக்குமாரன் இல்ல விழா!

ஆர்.எஸ்.பாரதி – தமிழச்சி தங்கபாண்டியன் – இரா.கிரிராஜன் வாழ்த்துகின்றனர்!

சென்னை, ஜூலை 18- சென்னை தெற்கு மாவட்ட கழக வழக்கறிஞரும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக சட்ட ஆலோசகருமான சைதை ஆ.தேவக்குமாரன், சென்னை உயர்நீதிமன்ற கழக வழக்கறிஞர் இந்துமதி தேவக்குமாரன் ஆகியோர் இல்ல விழா நாளை (19-07-2025) சனிக்கிழமை மாலை 7 மணியளவில் சைதை, பஜார் சாலையில் அமைந்துள்ள வர்த்தகர் சங்க அறக்கட்டளை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சிக்கு மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார். துணை மேயர் மு. மகேஷ்குமார், மண்டலக் குழு தலைவர்கள் இரா. துரைராஜ், எம். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

169'அ' வட்டக்கழக பொறுப்பாளர் சைதை ஆ.வரதன், 169 வது வட்ட செயலாளர் எல்.ஆரோக்கியராஜ் வரவேற்கிறார்கள். கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தென் சென்னை நாடளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மாநிலங்கலவை உறுப்பினர் இரா. கிரிராஜன், மாவட்ட கழக செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த்ரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, ப.தாயகம் கவி, ஜெ.கருணாநிதி, ஐ.பரந்தாமன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் க.தனசேகரன், மயிலை சு.வில்லவன், மாவட்ட அவைத்தலைவர் எஸ். குணசேகரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பாஸ்கரன், .ம.தி.மு.க சைதை ப.சுப்பிரமணி, காங்கிரஸ் எம்.ஏ.முத்தழகன் மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள், ஆன்றோர், சான்றோர் பெருமக்கள் கலந்துகொண்டு தேவகுமாரன், இந்துமதி தேவகுமாரன் ஆகியோர் குழந்தைககள் தே.ஆதவன், தே.ஆதிரை யின் முதலாமாண்டு பிறந்தநாளை யொட்டி வாழ்த்துகின்றனர்.

கழக வழக்கறிஞர்கள் எம்.ஜி.மதிவாணன், வே.ரமேஷ்குமார், மு.கா. கதிரவன் மற்றும் இரா. தமிழ்வாணன் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகிறார்கள்.

தாம்பரம் மாநகரம், பெருங்களத்தூர் வடக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கா.மு.சூர்யா தலைமையில், 51வது வட்ட செயலாளர் ஸ்ரீதர் குமார் (எ) பாபு வரவேற்புரையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் 4வது ஆண்டு கழக அரசின் சாதனைகள் விளக்க மாபெரும் தெருமுனை பொதுக்கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ தலைமை கழக பேச்சாளர் செங்கை தாமஸ், தலைமை கழக இளம் பேச்சாளர் இரா.ரிஷிசந்தோஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி 4வது மண்டல குழு தலைவரும், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளருமான டி.காமராஜ் 5வது மண்டல குழு தலைவரும், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளருமான எஸ்.இந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், தலைமை கழக பேச்சாளர்கள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன் தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.சத்தியபிரபு, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ச.இராஜேஷ், வீ.கார்த்திக், வே.சிவசுப்பிரமணியம், ச.பிரபு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர அணிகளின் நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட மாநகர பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் 15 வது மண்டலம், நீலங்கரை, 192 வது வார்டு சுகன்யா திருமண மண்டபத்தில் மண்டலக் குழுத் தலைவர் வி.இ.மதியழகன் முகாமை துவக்கி வைத்தார். இத்திட்டத்தில் பட்டா மாற்றம் செய்ய காலை பதிவு செய்தவர்களுக்கு வருவாய் துறை அலுவலர்கள் முன்னிலையில் மாலையே முகாமில் பட்டா வழங்கப்பட்டது.

வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் வேளச்சேரி இரயில்வே சாலையில் ரூ.1,37,47,000 மதிப்பீட்டில் மழைநீர் வாடிகால் அமைக்கும் பணியை வார்டு மாமன்ற உறுப்பினர் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பெ.மணிமாறன் தலைமையிலும் உதவி செயற்பொறியாளர் பிரேமா முன்னிலையில் தொடக்கி வைக்கபட்டன. உதவியாளர்கள் சுரேஷ், விவேக், சுகாதார ஆய்வாளர் ரம்யா, மாநகராட்சி ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர்.